# ஆடி மாதம் பொதுத் தேர்தல்?

**க.மயில்வாகனம்**
*(வன்னியிலிருந்து)*

ஸ்ரீ லங்காவின் பொதுத் தேர்தல் இன்னும் ஐந்து மாதங்களில் நடைபெறலாம் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இதற்குப் பல ஆதாரங்கள் சுட்டிக் காட்டப் படுகின்றன. முதலாவதாக தற்போதைய அரசின் செல்வாக்குச் சரிய ஆரம்பித் துள்ளதால் அதனை நன்கு புரிந்து கொண்ட ஜனாதிபதி தன் அதிகாரத்தினைப் பாவித்து அரசைக் கலைத்துவிட்டு புதிய தேர்தலுக்குச் செல்வது தனக்கும் தன் கட்சிக்கும் நன்மை பயக்குமென நம்புகிறார்.

கிழக்கைக் 'கைப்பற்றி' அங்குள்ள மக்களை விடுதலைப் புலிகளிடமிருந்து 'மீட்டு' விட்டதை பல கோடி ரூபாக்கள் செலவு செய்து ஓர் பெரிய விழாவாகக் கொண்டாடி சிங்கள மக்களை ஒரு வித மாயையிலே மயங்க வைத்து விலைவாசி உயர்வு பொருட்தட்டுப்பாடு போன்றவற்றிலிருந்து அவர்களின் மனதைத் திருப்பி வைத்துள்ளார்.

கிழக்கிலே போர்த் தந்திரோபாயத்தைப் பாவித்துப் புலிகள் தம் நிலைகளிலிருந்து சாதுரியமாகப் பின்வாங்கி அதனால் போராளிகள் இழப்பையும் பொது மக்களின் உயிர்களையும் காப்பாற்றித் தம் போர்க்கலங்களையும் சீராக நகர்த்தியமை ஒரு போர் யுக்தியெனலாம்.

இதனைப் பிழையாக அர்த்தங் கொண்ட அரசு, 'புலிகள் பலம் இழந்துவிட்டார்கள். விரைவில் வன்னியைக் கைப்பற்றி விடுவோம்' என்று தம்பட்டமடித்தனர். புலிகளை வரும் புத்தாண்டின் முன் முறியடித்து வன்னியைக் கைப்பற்றி விடுவோமென எட்டு மாதங் களுக்கு முன்னரே பறைசாற்றினார்கள்

ஆனால் யதார்தமோ வேறாகிவிட்டது. மணலாறு முதல் மன்னார் வரையும் கிளாலி முதல் நாகர் கோவில் வரை பன் முனைத் தாக்குதல்களை இத்தனை மாதங்களாகத் தொடர்ந்து நடாத்தி வருகிறார்கள். ஆனால் நாளதுவரை ஒரு அங்குல நிலத்தையேனும் அவர்களால் மீட்க முடியவில்லை.

சில சமயம் புலிகள் அரச படைகளை ஓரிரு கிலோ மீற்றர் தூரம் முன்னேற விட்டுப் பின் அவர்களைச் சுற்றி வளைத்து உக்கிர தாக்கு தலை நடாத்திப் படையினரை பின் முதுகு காட்டிப் பாரிய உயிரிழப்புகளுடன் ஓட ஓட விரட்டி உள்ளனர். ஆனால் அரசோ புலிகளைப் பலதூரம் விரட்டி புதிய இடங்களைக் கைப்பற்றியதாகப் பிரசாரம் செய்யும்.

தம் படைகள் முன்னேறியதைக் குறிப்படும் அரசு, தன் படை பின்வாங்கியதைக் சூறச் சுலபமாய் மறைத்துவிடும். பதிலாகத் தம் படைகள் தினமும் இருபது முப்பது புலிகளைக் கொன்றதாகப் பொய்ப்பிரசாரம் செய்து வரும்.

படையினர் கூறும் இந்தத் தொகைகளைக் கூட்டினால் இலங்கையில் ஒரு தமிழரேனும் இருந்திருக்க இயலாது என ஓர் ஆய் வாளர் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் குறிப்பிட் டிருந்தார். இதை அனுராதபுர மாவட்ட ஆயர் அதி வண நோபார்ட் ஆண்டகையும் கூறி யுள்ளார் சர்வகட்சி பிரதிநிதிகள் மகாநாட்டின் தலைவர் திஸ்ஸ விதாரணவும் போர் சில மாதங்களில் முடியுமென்பது நம்புதற்கில்லை என்று கூறினார்.

யதார்த்தம் வேறாக மாறியிருப்பதை உணராத அரசும் படைத்தளபதி சரத் பொன்சேகாவும் இவ்வருடப் புத்தாண்டுக்குள் புலிகளை பூண்டோடு அழித்து விடுவோம் என்றனர் முதலில் சில மாதங்கள் கழித்து பொன்சேகா அவர்கள் போர் ஆவணி மாதத்தினுள் முடிந்துவிடுமென்றார் அதைத் தொடர்ந்து தன் பதவிக்காலம் மார்கழி 2008 உடன் முடிவுறுமென்றும் இப் போரைத் தான் அதற்கு முன்னர் முடித்துவிடுவேனெனவும் சூழுரைத்தார். ஆனால் அவர் அண்மையில் அளித்த பேட்டியொன்றில் இருபது வருடங் களாக நடந்து வரும் போரை முடிவுக்குக் கொண்டு வரக் காலக் கெடு விதிக்க முடி யாதென திருவாய் மலர்ந்தருளினார். கிழக்கை ஆக்கிரமித்தவுடன் புலிகளை பூண்டோடு ஒழித்துக்கட்டுவோம் என்ற தளபதி இப்போ புலிகளை விரைவில் வென்று விடுவோமென்று கூறி இறுதியாகப் புலிகளை ஓரம் கட்டிவிடுவோம் என்ற சொற் பதங்களைப் பாவிக்கத் தொடங்கியுள்ளார். இதிலிருந்து போர் எவர் பக்கம் சாய்கிற தென்பது வெள்ளிடை மலை.

அடுத்ததாக அரசு முகம் கொடுக்கும் பிரச்சனை என்னவெனில் அது விலைவாசி ஏற்றமாகும். சென்ற மாதக் கணக்கின்படி வாழ்க்கைச் செலவின் ஏற்றம் 26% என அரசின் புள்ளி விபர இலாகாவால் வெளியிடப்பட்டுள்ளது.

போருக்கான செலவுகள் முன்னொரு போதும் இல்லாதவாறு பன் மடங்கு ஏறியுள் ளதால் பொது வேலைத்திட்டங்கள் பல பாதிப்படைந்துள்ளன. இதனால் வேலையில் லாத் திண்டாட்டமும் கூடுகிறது.

கொழும்பிலும் அதை அண்டிய பகுதி களிலும் நடைபெறும் குண்டு வெடிப்புகள் உல்லாசப் பயணிகளின் வருகையில் பெரு வீழ்ச்சி கண்டுள்ளது. வெளி நாட்டு முதலீடுகளும் வெகுவாகக் குறைந்துவிட்டது. அமெரிக்கா யப்பான் ஜேர்மனி போன்ற நாடுகள் தங்களின் அந்நிய உதவிவளங்களை புனராலோசனை செய்யப் போவதாகக் கூறியுள்ளனர்.

ஐரோப்பிய நாடுகள் வழங்கி வரும் ஸ்ரீ லங்காவின் ஏற்றுமதிப் பொருட்களுக்கான வரி விலக்கு இவ்வருட இறுதியில் மறு பரிசீலனை க்குட்படுத்தப்படுமென முன் அறிவித்தல் கொடுத்துள்ளன. அதனை அமெரிக்காவும் பின்பற்றலாம் என்று நம்பப்படுகிறது. இந்த வரிவிலக்கை அளிப்பதற்கு 27 விடயங்களுக்குத் தான் உடன்படுவதாக ஒரு சாசனத்தில் அரசு ஒப்பமிடல் வேண்டும். இதில் மனித உரிமைகள் தொழிலாளர் உரிமைகள், நல்லாட்சி போன் றவை உள்ளடங்கும். இந்தச் சலுகை மறுக்கப் பட்டால் 100,000 பேருக்கு மேல் வேலை இல்லாது போய்விடும் நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் இழுத்து மூடப்படும் அபாயம் ஏற்படும். இதனால் 200 கோடி டாலர்கள் வருமானம் அற்று விடும்.

அரசியல் யாப்புச் சபையை உடனடியாகச் செயல்படுத்தும்படி அரசிற்கு நெருக்குவாரம் கூடுகிறது. இதை அமைக்காது காலம் தாழ்த்த ஜனாதிபதிக்கும் அதிகாரம் இல்லை தவறினால் அது யாப்பை மீறிய குற்றமாகும்.

அரசியல் யாப்புச் சபை உருவாக்கப்பட்டால் காவல் துறை ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு, நீதிச் சேவை ஆணைக்குழு, லஞ்ச ஆணைக்குழு ஆகிய குழுக்கள் யாவும் மேற்படிச் சபையினாலேயே நியமிக்கப்படும். அது மட்டுமல்லாது இதுவரை ஜனாதிபதியினால் செய்யப்பட்ட நியமனங்கள், இட மாற்றங்கள் மாற்றி அமைக்கப்படும். குறிப் பாக காவல்துறை மாஅதிபர் விக்ரர் சில்வா மாற்றப்படுவார். இப்படி பல மாற்றங்கள் நிகழும்.

புலிகளை ஓரளவேனும் பலவீனப்படுத்தி ஒரு சிறிய நிலப்பரப்பையேனும் மீட்டெ டுத்து விட்டுத் தேர்தலை நடாத்தினால் வெற்றி நிச்சயம் தன்பக்கம் சாரும் என்று அரசு நம்புகிறது. இதில் ஓரளவு உண்மையு மிருக்கலாம். ஆனால் அது மீட்கப் படும் பரப்பளவையும் கேந்திர முக்கியத் துவத்தையும் பொறுத்து இருக்கும்.

எனவே விரைவில் இந்நிலையை அடைய அரசு விரும்புகிறது. ஆனால் அது நடைமுறைச் சாத்தியமா? இதற்குப் புலிகளை ஓரளவேனும் பலவீனமடையச் செய்ய வேண்டும்.. அடுத்து விலைவாசி ஏற்றத்தால் மக்களுக்கேற்பட்டுள்ள வெறுப்பைத் தவிர்க்க வேண்டும். அரச யாப்புச் சபை நியமிக்கப்படு முன் தேர்தல் நடாத்தப்பட வேண்டும். அல்லது தனக்குச் சார்பான நபர் களை முக்கிய இடங்களில் வைத்திருக்க இயலாது போய்விட்டால் தேர்தலின் போது செய்யக் கூடிய தில்லுமுல்லுகளுக்கு வாய்ப் பில்லாது போய்விடும்.

ஆகவே தான் ஜனாதிபதி தேர்தலை விரைவில் நடாத்த விரும்புகிறார். ஆனால் அதற்கு மேற் காட்டிய நியதிகள் ஒன்றாக அமைய வேண்டுமே. ஆனால் அவை அப்படி அமையுமென்ற சாத்தியக் கூறுகள் மிக மிக அருமை என்பதே யதார்த்தம்.


தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின்

## அனைத்துலகத் தமிழ்ப் பொதுத்தேர்வு 2008

தமிழர்கல்விமேம்பாட்டுப்பேரவையினால் நடாத்தப் படும் வருடாந்த அனைத்துலகத் தமிழ்ப் பொதுத்தேர்வு ஒவ்வொரு ஆண்டும் மே (May) மாதத்தில் வருகின்ற முதல் சனிக்கிழமையில் உலக நாடுகளில் ஏககாலத் தில் நடைபெறுகின்றது. இத்தமிழ்ப் பொதுத் தேர்வில் தற்போது உலகநாடுகள் ரீதியாக பல்லாயிரக்கணக் கான மாணவர்கள் தோற்றி வருகின்றார்கள். பிரித்தா னியா வாழ் மாணவர்களுக்கு வசதியாக அவ்வப் பிராந்தியங்களில் பிரித்தானிய தமிழர் கல்வி மேம் பாட்டுப் பேரவையால் ஒழுங்கமைக்கப்பட்ட தேர்வு நிலையங்களில் தேர்வு நடைபெற்று வருகின்றது.

### தேர்வு நிலையங்கள்:

| | |
|---|---|
| Hounslow | Stevenage |
| Ilford | Tolworth |
| Leicester | Tooting |
| Milton Keynes | Walthamstow |
| Plumstead | Watford |
| Southall | Wembley |

Contact Telephone:
**020 3084 4978, 07930 904902**
**Tamil Kalvi Koodam**
95 Mill Farm Crescent, Hounslow,
Middlesex TW4 5PJ

தேர்வு நாள்:
**03.05.2008 சனிக்கிழமை**

தேர்வு நேரம்:
**மதியம் 12:45மணி (தேர்வு மதியம் 1மணி)**

தேர்வு நிலைகள்:
**தமிழ் வளர்நிலை 1, 2, 3 & 4**
**தமிழ் ஆண்டு 5, 6, 7, 8, 9 & 10**

தேர்வு விண்ணப்பப்படிவம்:
**www.tamilkalvikoodam.org.uk**
இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்

பரீட்சை விண்ணப்ப முடிவு திகதி:
**31/03/2008**

பரீட்சைக்கான பாடநூல்:
**தமிழ்வழி பாடநூல் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் பயிற்சி**

முக்கியக் குறிப்பு – தமிழ்வழி பாடத்திட்டத்தினை பின்பற்றாத மாணவர்களும் பரீட்சைக்கு தோற்றலாம்.

தேர்விக்கான மேலதிக விபரங்களை www.tamilkalvikoodam.org.uk இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இப்பரீட்சைக்கு மாணவர்களை உள்கொணரத் தூண்டும் மூலகாரணமாக இருப்பது, புலம்பெயர் மண்ணில் வசித்து வருகின்ற தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கின்ற மாணவர் களுக்கு அவர்கள் விரும்பத்தக்க மேலைத்தேய கல்விமுறைக்க மைந்த இலகுநடை தமிழ்வழி பாடத் திட்டமே காரணமாகும். இது மழலையர்நிலை, சிறுவர்நிலை எனப் படிப்படியாக ஆண்டு 10 வரையான பாடத்திட்டமாக அழகிய புத்தக அமைப்பில் அமைந்துள்ளது. கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய திறன்களை வளர்க்கும் விதத்தில் ஒலிவெட்டு, வாசித்தல் பயிற்சிப்புத்தகம், எழுத்துப் பயிற்சிப்புத்தகம் எனமூன்று வடிவங் களில் அமைந்துள்ளது. இந்நூல் சார்ந்ததாகவே பரீட்சைகள் அமைகின்றது.

தங்கள் செல்வங்களின் தேர்வுக்கான நல்வாழ்த்துகளுடன்...

**தேர்வுக்குழு**
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
பெரிய பிரித்தானியா




பரீட்சைக்கான பாட நூலான தமிழ் வழி பாட நூலினை யும் கடந்த கால அனைத்துலகத் தமிழ்ப் பொதுத் தேர்வு வினாத் தாள்களையும் தேர்வு நிலையங்களில் பொதுத் தேர்வு 2008 நடைபெறும் 03.05.2008 சனிக்கிழமை அன்று பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.